# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 01 வியாழக்கிழமை 17.07.2025 கதிர் 257




# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அர்ச்சுனா எம்.பி. - தவிசாளர்கள் கடும் சொற்போர்



யாழ்ப்பாணம், ஜூலை 17

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களர்களுக்கும் இடையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று யாழ். மாவட்ட செயலகக்கேட்போர்கூடத்தில்நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சி சபைகள் முறையாக கழிவகற்றலை மேற்கொள்ளவில்லை எனவும், வீதிகளில் கழிவுகள் குவிந்து கிடக்கின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்நிலையில், கழிவுகள் வீதிகளில் இருக்கின்றன எனப் பொதுவாகக் கூறாமல் எந்தெந்த இடங்களில் கழிவுகள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுமாறு உள்ளூராட்சி

7➤

# செம்மணிக்கு நீதி கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## பொலிஸார் தடுத்ததால் குழப்பம்






கொழும்பு, ஜூலை 17

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பில் இன்று பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பேரணியாகச் செல்ல முயன்ற வேளை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் குழப்ப நிலை ஏற்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நீதிக்கான மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பெருமளவானவாகள் கலந்துகொண்டிருந்தனர்.

7➤

# கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி ஒருவர் மரணம்




வவுனியா, ஜூலை 17

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதுண்டு நேற்று இரவு ஒருவர் பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப்

7➤

# கூமாங்குளம் வன்முறைச் சம்பவம்: கைதான இருவருக்கும் விளக்கமறியல்



வவுனியா, ஜூலை 17

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு வரையும் 14 நாள்கள் விளக்கமறியலில்

வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா,

7➤



## இன்று கூடவுள்ள இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் துறைசார் மேற்பார்வைக் குழு

கொழும்பு, ஜூலை 17

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு இன்று மீண்டும் கூடவுள்ளது.

இந்த குழு கடந்த 15ஆம் திகதி பாராளுமன்றத்தில் முதன் முறையாக கூடியது.

இக்கூட்டத்தில் வலுசக்தி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கைமின்சார சபை உள்ளிட்ட நிறுவங்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போதுஇலங்கைபொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுவினால்இந்த சட்டமூலத்தை திருத்துவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் சில தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இதில் சில விடயங்கள் தொடர்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களமும் குழு முன்னிலையில் சட்டமூலம் தொடர்பில் கருத்துத் தெரிவித்ததுடன் இணக்கம் தெரிவிக்கப்பட்ட திருத்தங்களுடன் சட்டமூலத்தை மும்மொழியிலும் அச்சிட்டு இன்று குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

## குஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 17

குஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பெண் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த 23 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் பேங்கொக்கில் இருந்து இந்தியாவின் சென்னைக்கு வந்த பின்னர், அங்கிருந்து நேற்று (16) இரவு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளார்.

விமான நிலையத்திலிருந்து வெளியேறும்போது, அவரது பயணப் பைக்குள் 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள குஷ் போதைப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன் 25 உணவுப் பொதிக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோகிராம் 356 கிராம் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டதாக கட்டுநாயக்க விமானநிலைய பொலிஸ்போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இன்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டில் தடைசெய்யப்பட்ட ஆயுதத்துடன் நபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 17

ஹபராதுவ பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும்ரவைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹபராதுவ பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் உனவட்டுன பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, 9 மில்லிமீற்றர் ரவைகள் 04 மற்றும் தடைசெய்யப்பட்ட ஆயுதம் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சீருடையையும் நன்கொடையாக வழங்கியது சீனா

அரச மற்றும் அரசாங்கத்தின் உதவிகளைப் பெறும் அனைத்துப் பாடசாலைகளுக்குமான 2025 ஆம் ஆண்டுக்குரிய சீருடைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான சான்றிதழ் பரிமாற்றம்

2025 ஆம் ஆண்டுககான 5,171 மில்லியன் ரூபாய் பெறுமதியான பாடசாலை சீருடைக்குத் தேவையான சீருடைத் தொகையையும், சீன அரசின் அன்பளிப்பாக வழங்கியதையும் அதகாரப்பூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு, பத்தரமுல்லை கல்வி அமைச்சில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவின் பங்கேற்பில் ஜூலை 16 ஆம் திகதி நடைபெற்றது.



அப்பொழுது 2025 ஆம் ஆண்டிற்குத் தேவையான மொத்த சீருடைத் தேவையும் வழங்கப்பட்டு முடிந்ததை அறிவிப்பதற்கான சான்றிதழ் பரிமாற்றம் பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் குை ணுாநொழபெ ஆகியோருக்கிடையே இடம்பெற்றது.

ஏற்கனவே, 2026 ஆம் ஆண்டிற்குத் தேவையான பாடசாலை சீருடைத் தொகையையும் அன்பளிப்பாகப் பெற்றுத் தருமாறு சீனாவிடம் தமது கோரிக்கையை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக மக்கள் சீனக் குடியரசின் இலங்கை சீனத் தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த பிரதமர், “இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே இருந்து வருவது ஒத்துழைப்புடன் கூடிய நீண்டகால நட்பாகும். எனது நாட்டின் பாடசாலை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட இந்த சீருடையும் அந்த நீண்டகால நட்பின் ஓர் அங்கமே ஆகும்.

2023 - 2024 ஆண்டுகளிலும் சீன அரசு எமது பாடசாலை சீருடைத் தேவையில் கணிசமான பகுதியைக் கொடுத்ததோடு, 2025 ஆம் ஆண்டின் முழு சீருடைத் தேவையையும் எமது நாட்டின் ஒட்டுமொத்தப் பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

இலங்கைக்கு மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் இருந்தபோது, எமது மாணவர் சமுதாயத்தின் கல்வியை முன்னெடுப்பதற்காக சீன அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற அந்த நன்கொடையானது எமக்குப் பெரும் மதிப்பு மிக்கதாகும்.

2026 ஆம் ஆண்டிற்காகவும் சீன அரசின் இந்த தொடர்ச்சியான உதவியை எமக்குப் பெற்றுத் தருமாறு ஏற்கனவே எமது அரசு சீன அரசாங்கத்திடம் கோரியிருக்கிறது.

இத்தருணத்தில் நான் எமது நாட்டின் பிள்ளைகளின் சார்பாகவும் பெற்றோர்களின் சார்பாகவும் சீன அரசுக்கும், மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்,” எனக் கூறினார்.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த இலங்கைக்கான சீனத் தூதர் குை ணுாநொழபெ அவர்கள்,

“இலங்கைக்கு உதவி தேவைப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் சீனா உங்களது நம்பிக்கைக்குரிய சகோதரனாகவும் உதவியாளனாகவும் செயல்படும். இலங்கையின் குழந்தைகள் இந்த நாட்டின் எதிர்காலம் மட்டுமல்ல, சீன இலங்கை நட்பின் வாரிசுகளும் ஆவர்.

அவர்களின் சீருடையிலுள்ள ஒவ்வொரு தையலிலும், பழமையான நமது இரு நாட்டு நாகரிகங்களுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பின் கதையும் பின்னிப் பிணைந்திருக்கும். பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய அம்மையார் கொடுக்கும் பங்களிப்பையும் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்,” எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை சீனத் தூதரக அதிகாரிகளும், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர். (ஐ)

---

## கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹெர உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது

கொழும்பு, ஜூலை 17

கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் எசல பெரஹெர உற்சவம் எதிர்வரும் 25இல் ஆரம்பமாகவுள்ளது

அதன்படி ஜூலை 30ஆம் திகதி முதல் 10 நாட்களுக்கு கும்புல் பெரஹெர மற்றும் ரந்தோலி பெரஹெர வீதி ஊர்வலம் நடைபெறவுள்ளதாக தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேர தெரிவித்துள்ளார்.

வீதி ஊர்வலத்திற்கு போதுமான யானைகள் இல்லாதது ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியமை குறிப்பிடத்தக்கது.

---

## கடல் சீற்றம்: முன்னெச்சரிக்கை விடுப்பு

கடல் சீற்றம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்திற்கு காலி முதல் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கடல் பகுதிகளுக்கு கடற்படை மற்றும் மீன்பிடி சமூகங்கள் செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வுத் துறையின் இயற்கை ஆபத்துகள் முன்னெச்சரிக்கை மையம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தப் பகுதிகளில் மணிக்கு 55 முதல் 65 கிமீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும், கடல் கொந்தளிப்பாகவும் அல்லது மிகவும் சீற்றமாகவோ இருக்கும் என்றும் திணைக்களம் எச்சரித்துள்ளது. அலைகளின் உயரம் அண்ணளவாக 2.5 முதல் 3.0 மீட்டர் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலி முதல் கொழும்பு வழியாக புத்தளம் வரையிலான கடல் பகுதிகளில் மீனவர்கள் மற்றும் கடற்படையினரும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், ஏனெனில் கொந்தளிப்பான நிலைமை பரந்த பகுதியில் பரவக்கூடும். புத்தளம் முதல் கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கரையோரப் பகுதிகளில் கடல் அலைகள் காரணமாக கடலோர அலைகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

எதிர்கால வானிலை புதுப்பிப்புகள் மற்றும் முன்னறிவிப்புகளில் கவனம் செலுத்துமாறு வானிலை ஆய்வுத் துறை அனைத்து கடல்சார் சமூகங்களையும் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

---

## மாத்தறை வலய பொலிஸ் அதிகாரிகள் மூவர் பணிநீக்கம்!

*மாத்தறை, ஜூலை 17*

*மாத்தறை வலயத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணியாற்றிய மூன்று அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்படுவதாக மாத்தறை வலய பதில் பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*மாத்தறை வலய புலனாய்வு பிரிவில் பணியாற்றும் ஒருவரும், திஹகொட மற்றும் மாவரல பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் இரு அதிகாரிகளுமே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

*குறித்த மூன்று பொலிஸ் அதிகாரிகளும் மாத்தறை, வல்கம பகுதியில் உள்ள ஒரு மசாஜ் நிலையத்திற்குச் சென்று முகாமையாளருடன் கடுமையான வார்த்தை பிரயோகத்தில் ஈடுபட்டதுடன், அவரது சேவைகளை இலவசமாகப் பெறவும் முயன்றுள்ளனர்.*

*இந்த விடயம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது.*

*விசாரணையின் போது குறித்த மூன்று பொலிஸ் அதிகாரிகளும் குற்றவாளிகள் என கண்டறியப்பட்டுள்ளனர்.*

*அதன்படி, பொலிஸாரின் நன்னடத்தையை பாதிக்கும் வகையில் தனிப்பட்ட இலாபத்திற்காக பொலிஸ் பதவியைப் பயன்படுத்துதல் மற்றும் தவறான நடத்தையில் ஈடுபட்டு ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியதன் காரணமாக குறித்த மூன்று பொலிஸ் அதிகாரிகளும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.*

*சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

---

# கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சராக உள்ள ஈழத் தமிழருக்கு எதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டு!

கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சராக உள்ள ஈழத் தமிழரான கெரி ஆனந்தசங்கரிக்கு எதிராக அந்நாட்டு அரசாங்கம் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இலங்கையின் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினரான செந்தூரன் செல்வகுமார் என்பவருக்கு கனேடிய குடியுரிமை வழங்குவதை ஆதரித்து, 2016 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கனடா எல்லை சேவைகள் நிறுவனத்திற்கு கெரி ஆனந்தசங்கரி இரண்டு கடிதங்களை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்பதால், கெரி ஆனந்தசங்கரி பயங்கரவாதத்தை ஆதரிப்பதாக அவர் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சரான கேரி ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது இந்தக் கடிதங்களைச் சமர்ப்பித்ததாகக் கூறப்படுகிறது.

செந்தூரன் செல்வகுமாருக்கு விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகள் இருப்பதாகக் கூறி குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC) பல சந்தர்ப்பங்களில் அவரது குடியுரிமை விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது.

அந்தக் கடிதங்களில், குடும்பப் பிரிவு குறித்த கவலைகளைக் குறிப்பிட்டு, மனிதாபிமான அடிப்படையில் செல்வகுமாருக்கு கனேடிய குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆனந்தசங்கரி கோரியதாகக் கூறப்படுகிறது.

எனினும் ஆனந்தசங்கரி மீதான குற்றச்சாட்டுகள், விடுதலைப் புலிகள் ஒரு தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு என்பதால், அவரது நடவடிக்கைகள் பயங்கரவாதத்தை ஆதரிப்பதாகச் சொல்கின்றன.

மேலும் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவளிப்பதாகக் கூறப்படும் இந்தக் குற்றச்சாட்டுகளைக் கருத்தில் கொண்டு, பொதுப் பாதுகாப்பு அமைச்சராக கேரி ஆனந்தசங்கரி தொடர்ந்து பணியாற்றுவது சிக்கலாக இருப்பதாக கனடா பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, பொது பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

குறித்த அறிக்கையில், இந்த வழக்கு நீதிமன்றத்தின் முன் இருக்கும்போது விரிவாக கருத்து தெரிவிப்பது பொருத்தமற்றது என்று தெரிவித்துள்ளது.

மேலும் அமைச்சரானதிலிருந்து இதுபோன்ற ஆதரவு கடிதங்களை தான் சமர்ப்பிக்கவில்லை என்று ஆனந்தசங்கரி வலியுறுத்தினார்.

தனது முந்தைய ஆதரவு மனிதாபிமான அடிப்படையில் அமைந்ததாகவும், கனடாவில் பிறந்த குழந்தையுடன் ஒரு குடும்பம் பிரிவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், எந்தவொரு பயங்கரவாத அமைப்பையும் தான் ஒருபோதும் ஆதரித்ததில்லை என்றும், அதற்கு ஆதரவாக முடிவுகளை எடுக்க மாட்டேன் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சிக்கு துணை போவதாக என்.சி.இ.ஆர்.டிக்கு வைகோ கடும் கண்டனம்

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சிக்கு துணை போவதாக என்.சி.இ.ஆர்.டிக்கு மதிமுக

பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேசிய கல்விக் கொள்கை (நேp) மற்றும் தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு (NCF) ஆகியவற்றின் கீழ் பள்ளிக் கல்விக்கான புதிய புத்தகங்களை என்.சி.இ.ஆர்.டி தயாரித்துள்ளது. என்.சி.இ.ஆர்.டி (தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் – NCERT ) வெளியிட்ட 7 ஆம் வகுப்புக்கான புதிய சமூக அறிவியல் புத்தகத்தில் முகலாயர்கள் மற்றும் டெல்லி சுல்தானிய ஆட்சி பற்றிய எந்தக் குறிப்பும் அளிக்கப்படவில்லை.

இதுவரை இந்தப் புத்தகத்தில் முகலாயப் பேரரசு மற்றும் டெல்லி சுல்தானியர்கள் குறித்து சுருக்கமான பாடங்கள் இருந்தன. 7 ஆம் ஆம் வகுப்பு சமூக அறிவியலுக்கான புதிய புத்தகத்தில் ஐந்து தலைப்புகளின் கீழ் 12 பாடங்கள் உள்ளன. அதன் முதல் தலைப்பு ‘இந்தியாவும் உலகமும்: நிலமும் மக்களும்’ என்பதாகும். அதில் மூன்று பாடங்கள் இடம்பெற்று உள்ளன. இந்தியாவின் புவியியல் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்வது, இந்தியாவின் வானிலை மற்றும் காலநிலையைப் பற்றியதாக அதன் உள்ளடக்கம் உள்ளது.

‘கடந்த கால அடுக்குகள்’ என்பது அதன் இரண்டாவது தலைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. புத்தகத்தின் இந்தப் பகுதியில் வரலாற்று விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புதிய தொடக்கங்கள் தலைப்பில் நகரங்கள் மற்றும் அரசுகள், பேரரசுகளின் எழுச்சி, மறுசீரமைப்பின் சகாப்தம், குப்தர்களின் காலம்: முடிவில்லா படைப்பாற்றலின் காலம்’ போன்றவை அதன் பாடங்களாக உள்ளன.

‘நமது கலாச்சார பாரம்பரியம் மற்றும் அறிவு மரபுகள்’, ‘ஆட்சி மற்றும் ஜனநாயகம்’ மற்றும் ‘நம்மைச் சுற்றியுள்ள பொருளாதார அறிவு’ போன்றவை அந்தப் புத்தகத்தில் அடுத்தடுத்த தலைப்புகளாக உள்ளன. ஆனால் 2025-26 ஆண்டுக்கான என்.சி.ஆர்.டி புதிய சமூக அறிவியல் புத்தகத்திலிருந்து முகலாய மற்றும் சுல்தானிய ஆட்சிக் காலங்கள் குறித்த குறிப்புக்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டன.



இதற்கு முன்பு கடந்த 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பன்னிரண்டாம் வகுப்பு வரலாற்றுப் புத்தகத்திலிருந்து முகலாயர்கள் தொடர்பான அத்தியாயங்களை என்.சி.இ.ஆர்.டி நீக்கியது. ‘இந்திய வரலாற்றின் கருப்பொருள்கள்’ என்ற தலைப்பில் மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்ட இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பகுதியில், “மன்னர்கள், வரலாறு மற்றும் முகலாய அரசவை” என்ற ஒன்பதாவது அத்தியாயம் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டது.

என்சிஇஆர்டியின் எட்டாம் வகுப்பு புதிய பாடப் புத்தகம் இந்த வாரம் வெளியிடப் பட்டது. சமூகத்தை ஆராய்தல் இந்தியா மற்றும் அதற்கு அப்பால் (நுழிடமுசபை ளுழஉைநவல: ஐனெயை யனெ டீநலழனெ) என்ற தலைப்பில் வந்துள்ள இந்த புத்தகத்தில் டெல்லி சுல்தான்கள், முகாலயர்கள், மராத்தியர்கள் மற்றும் காலனித்துவ சகாப்தத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் புதிய என்சிஇஆர்டியின் பாடத்திட்டத்தில் முதலாவதாகும்.

புத்தகத்தின் தொடக்கத்தில் வரலாற்றில் சில இருண்ட காலகட்டங்கள் பற்றிய குறிப்பு என்ற தலைப்பில் ஒரு பகுதி உள்ளது. போர் மற்றும் ரத்தக் களரியை முதன்மையாக கொண்ட உணர்வுபூர்வமான மற்றும் வன்முறை நிகழ்வுகள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. செய்தி புத்தகங்கள்

13 முதல் 17ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய வரலாற்றை உள்ளடக்கிய அத்தியாயம் இந்தியாவின்அரசியல்வரைபடத்தை மறுவடிவமைத்தல், டெல்லி சுல்தான்களில் எழுச்சி மற்றும் வீழ்ச்சி, விஜயநகர பேரரசு, முகாலயர்கள், சீக்கியர்களின் எழுச்சி குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

பாடப்புத்தக்கத்தில் பாபர் நகரங்களில் முழு மக்களையும் கொன்று குவித்த ஒரு மிருகத்தனமான மற்றும் இரக்கமற்றவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவுரங்கசீப் கோயில்களையும், குருத்வாராக்களையும் அழித்த ராணுவ ஆட்சியாளர் என்றும், அக்பரின் ஆட்சி கொடூரமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்துத்துவ சனாதன சக்திகளின் திட்டப்படி நாட்டின் பன்முகத்தன்மைக்கும், மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கும் என்.சி.இ.ஆர்.டி துணை போவது கடும் கண்டனத்துக்குரியது. எனவே, உடனடியாக பாடப்புத்தகங்களில் இருந்து இத்தகைய கருத்துக்களை நீக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)



## நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றம்: சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் பதவியை இழந்தார் உமா மகேஸ்வரி

சங்கரன்கோவில் நகராட்சி தலைவர் எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், உமா மகேஸ்வரி பதவியை இழந்தார். தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியின் மன்றத் தலைவி உமா மகேஸ்வரி மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் செய்ய முன்வரவில்லை என்றும், தெருவிளக்கு அமைப்பது, சாலை அமைப்பது போன்ற எதுவும் செய்து தரவில்லை என்று சொல்லி பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். மேலும், மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதில்லை என்ற குற்றம்சாட்டும் எழுந்தது.

அவர்களின் முறையீட்டுக்கு செவி சாய்க்காமல் இருந்து வந்ததால் உமா மகேஸ்வரிக்கும் கவுன்சிலர்களுக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம் நடந்து வந்துள்ளது. இதனால் கடந்த கூட்டத்தில் அவர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரக் கோரி நகராட்சி ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டிருந்தது. இந்த மனு மீதான நம்பிக்கை இல்லா வாக்கெடுப்பு கடந்த ஜூலை 2ம் தேதி நடைபெற்ற நிலையில், 30 கவுன்சிலர்களில் 28 பேர் நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் உமா மகேஸ்வரி பதவி பறிபோனது.

இதனைத்தொடர்ந்து நம்பிக்கை இல்லா தீர்மானத்துக்கு எதிராக உமா மகேஸ்வரி உயர்நீதிமன்ற மதுரை கிளையை நாடியா நிலையில், வாக்குசீட்டு அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தி தீர்மானத்தை நிறைவேற்றி சமர்ப்பிக்க ஐகோர்ட் கிளை ஆணையிட்டிருந்தது. இந்நிலையில் இன்று வாக்குச்சீட்டு முறையில் நடைபெற்ற நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் சங்கரன்கோவில் நகர்மன்றத் தலைவர் உமா மகேஸ்வரி தோல்வி அடைந்தார். இன்று கவுன்சிலர்களிடையே நடந்த ரகசிய வாக்கெடுப்பிலும் 28 வாக்குகள் தீர்மானத்திற்கு ஆதரவாக விழுந்துள்ளன. இதனைத்தொடர்ந்து சங்கரன்கோவில் நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி நகர்மன்றத் தலைவர் பதவியை இழந்தார். (ஐ)

# அண்ணாமலையார் கோயிலில் அமைச்சர் சேகர்பாபு திடீர் ஆய்வு

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு பக்தர்களின் வருகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் அவர்களுக்கு தேவையான கூடுதல் வசதிகளை செய்து தருவது குறித்து அமைச்சர்கள் சேகர்பாபு, எ.வ.வேலு ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு பக்தர்கள் வருகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, பவுர்ணமி நாட்களுக்கு இணையாக அரசு விடுமுறை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் பக்தர்கள் தரிசனத்துக்காக வருகின்றனர். ஆந்திரா, தெலங்கானா மற்றும் கர்நாடகாவில் இருந்து வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் சாதாரண நாட்களில் கூட பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய சுமார் 3 மணி நேரத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.



இதனால் அண்ணாமலையார் கோயிலில் பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய சிறப்பு தரிசனம், அமர்வு தரிசனம் போன்றவை ரத்து செய்யப்பட்டது. பொது தரிசனம் மற்றும் கட்டண தரிசனத்தில் மட்டும் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இருப்பினும் பொது தரிசன வரிசையில் ராஜகோபுரத்தை கடந்தும், கட்டண தரிசன வரிசை அம்மணி அம்மன் கோபுரத்தை கடந்து இரட்டை பிள்ளையார் கோயில் வரையிலும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேலும் தரிசன வரிசையில் செல்லும் அவ்வப்போது பக்தர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு மற்றும் கைகலப்பாக மாறிவிடுகிறது. இதுபோன்ற சம்பவங்களை தடுக்க தரிசன வரிசையில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு இன்று அதிகாலை அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் தரிசன வரிசையில் குழந்தைகளுடன் காத்திருந்த தாய்மார்களுக்கு பால், மற்றும் பக்தர்களுக்கு வாழைப்பழம் போன்றவற்றை வழங்கினார். மேலும் பக்தர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இதைத்தொடர்ந்து அமைச்சர்கள் எ.வ.வேலு, சேகர்பாபு ஆகியோர் மாடவீதிகளில் ஆய்வு செய்தனர். மாட வீதியில் சாலை அமைக்கும் பணியை ஆய்வு செய்து, பக்தர்களுக்கு இடையூறு இன்றி பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டனர். மேலும் அண்ணாமலையார் கோயிலில் பக்தர்களுக்கு செய்ய வேண்டிய கூடுதல் வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தனர். (ஐ)

## ஏழைத்தொழிலாளர்களை குறிவைத்து கிட்னி எடுப்பதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது: செல்வப்பெருந்தகை கண்டனம்

ஏழைத்தொழிலாளர்களை குறிவைத்து கிட்னி எடுப்பதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது என தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர்தனது எக்ஸ்வலைதளபக்கத்தில்கூறுகையில், நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையம், குமாரபாளையம் மற்றும் திருச்செங்கோடு பகுதிகளில் ஏழைத்தொழிலாளர்களை குறிவைத்து அவர்களின் வறுமையை பயன்படுத்தி வெறும் 3 லட்சத்திற்கு அவர்களின் கிட்னி எடுப்பதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது. இக் கொடூரச்செயலில் ஈடுபடுபவர்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

ஏழை மக்களின் உடல் உறுப்புகளை விற்பனைக்கான பொருளாக பயன்படுத்துவது மனித உரிமையை முற்றிலும் இழிவுப்படுத்தும் செயல். இன்றைய சமூகத்தில் சில மனித உறுப்புகள், குறிப்பாக ‘கிட்னி’, ஒரு வியாபாரப் பொருளாக மாறிவிட்டது என்பது வருத்தத்துக்குரியது. சட்டப்படி தானம் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருக்க, சிலர் அதனைத் தாண்டி, லாப நோக்கத்தோடு இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது குற்றமாகவே பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு, காவல்துறை மற்றும் மருத்துவ நிறுவனங்கள் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# சுயம்வரப் பெண்ணரசிகள்!

பாலைவனத்தின் நடுவில் 50 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் ஓர் அழகு போட்டி நடைபெறுகிறது. பழைய பேட்டரி அமிலம், கருகிய எலும்புகளினால் உருவாக்கப்பட்ட கண் மை, உதட்டுச் சாயத்தைத் தயாரிக்கிறார்கள். அதனைக் கண்களிலும் உதடுகளிலும் இட்டுக் கொள்கிறார்கள். ஒப்பனைக்குத் தேவைப்படும் ஒரேஞ்ச் முகப் பொடிக்காக 1400 கிலோமீற்றர் தூரம் நடந்தே சென்று, மலையிலிருந்து அதைக் கொண்டு வருகிறார்கள். சுண்ணாம்பு, கற்கள், சிவப்பு மண், விலங்குகளின் எலும்புகளை அரைத்து அற்புதமான முகத்தூள் ஒன்றைத் தயாரித்து, தங்கள் முகத்திற்கு ஒப்பனை செய்ய ஆரம்பிக்கிறார்கள். இதற்கு ஒரு நாள் முழுவதும் எடுத்துக் கொள்கிறார்கள். கூரிய மூக்கு, வெண்மையான பற்கள், பளபளப்பான கண்கள் கவர்ச்சிகரமாகக் காட்டும் என்பதற்காக அழகான ஒப்பனை நடைபெறுகிறது. சிலர் தங்களுடைய வெள்ளைப் பற்கள் பளிச்சென்று தெரிய வேண்டும் என்பதற்காக, கறுப்பு பேட்டரி இரசாயனங்களை உதடுகளுக்குப் பூசுகிறார்கள். நீண்ட நெற்றி அழகை கூடுதலாக்கும் என்பதற்காக முன்தலையிலிலுள்ள முடிகளை எடுத்து விடுகிறார்கள். பிரகாசமான வண்ண மணிகள், இறகுகளாலான ஓர் ஆடம்பரமான உடையை அணிகிறார்கள். மறுசுழற்சி செய்யப்பட்ட நெகிழி பொருட்கள், கண்ணாடிகளால் தங்கள் ஆடைகளை அலங்கரிக்கிறார்கள். அழகு போட்டி நடைபெறும் முன் புளித்த மரப்பட்டையிலிருந்து உருவாக்கிய தேநீரைக் குடிக்கிறார்கள். பரவசத்துடன் அழகு போட்டி ஆரம்பிக்கிறது. அனைவரும் வரிசையாக நின்றுகொண்டு வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் மணிக்கணக்கில் நடனமாடுகிறார்கள். இவ்வாறு ஆடுபவர்கள் மத்திய ஆபிரிக்காவின் வோடபே பழங்குடியை சேர்ந்த இளம் ஆண்கள். தங்கள் மனங்கவர் ஆண்மகனைத் தங்களுக்கு இணையாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் வோடபே பழங்குடியின் திருமணமான, திருமணமாகாத பெண்கள்.




சஹாராவின் வறண்ட பகுதிக்கு மழை கொண்டு வரும் வளத்தைக் கொண்டாடும் நோக்கத்துடன் வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் ஜெர்வோல் திருவிழாவில், வோடாபே ஆண் நாடோடிகள் ஒரு துணையை ஈர்க்கும் முயற்சியில் தினறும் வெயிலில் மணிக்கணக்கில் ஆடுகிறார்கள். இதற்காகத் தங்களை அழகு படுத்திக்கொள்ள பல மணி நேரம் செலவிடுகிறார்கள்.

வோடபே பெண்கள் எந்தவித ஒப்பனையும் இல்லாமல் தங்கள் தோற்றத்தில் பெருமை கொள்கிறார்கள். பெண்களின் முகத்தில் பச்சை குத்திக்கொள்வது அவர்களுடைய வலிமை, வீரம் ஆகியவற்றைக் குறிக்கிறது. நைஜரில் வோடாபே பெண்கள் இண்டிகோ சாயமிடப்பட்ட துணியை உடையாக அணிகிறார்கள். மருதாணியைக் கைகளில் வைத்துக் கொள்கிறார்கள்.

நாடோடி வோடபே பழங்குடியினர், மத்திய ஆபிரிக்காவில் பல நூற்றாண்டுகளாகப் புலம்பெயர்ந்து வந்த ஃபுலானி மக்களின் துணைக்குழுக்களைச் சேர்ந்தவர்கள். வடக்கு கேமரூனில் இருந்து சாட், நைஜர், நைஜீரியா வரை சஹேல் பாலைவனம் வழியாகத் தங்கள் கால்நடைகளை மேய்கின்றனர். வோடபே பழங்குடி, இந்தப் பகுதியில் உள்ள கடைசி நாடோடி பழங்குடி. ஒரு லட்சம் வோடாபே மக்கள் எஞ்சியிருக்கலாம். பல தசாப்தங்கள் வறட்சியால் அவர்களின் மந்தைகள் குறைந்துவிட்டன. மேலும் அவர்களின் பாரம்பரிய மேய்ச்சல் பாதைகள் விவசாய நிலங்களாகப் பயிரிடப்பட்டு, சிறிய, குறுகலான பகுதிகளாகியிருக்கின்றன. தங்களுடைய வீடுகள், பாய்கள், உடைகள், சமையல் பாத்திரங்கள், குழந்தைகள், புதிதாகப் பிறந்த விலங்குகள், பெரிய சுரைக்குடுக்கை என அனைத்தையும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்ல தயாராக வேண்டும். பொருட்களைக் கழுதையின் அல்லது எருதின் முதுகில் ஏற்றுவார்கள் பெண்கள்.

ஒரு வோடபேவின் உடைமைகள் அனைத்தும் ஒரு கழுதையின் முதுகில் அடங்கிவிடும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை அடைந்த பிறகு, கழுதைகள் அவிழ்த்துவிடப்பட்டு, பெண்கள் முகாம் அமைக்க ஆரம்பிப்பார்கள். இரண்டு அலமாரிகளில் மேல் அலமாரியில் விலைமதிப்பற்ற சுரைக்குடுவைகள் அடுக்கப்படுகின்றன. இரண்டாவது அலமாரியானது தரையில் இருந்தால் சேதமடையும் பொருட்களை வைக்கப் பயன்படுகிறது. குழந்தைகள் தூங்கும் இடமாகவும் உள்ளது. குடும்பத்திற்கு உணவளிப்பதில் பெண்கள் முக்கியப் பொறுப்பு வகிக்கிறார்கள். பசும்பால் கறக்கிறார்கள், பால் அவர்களின் முக்கிய உணவு. வெண்ணெய், தயிர் ஆகியவை புதிய பாலில் இருந்து மணிக்கணக்காக கடைவதன் மூலம் தயாரிக்கப்படுகின்றன. சந்தையில் பால் பண்டமாற்று செய்வதன் மூலம் அவர்கள் பெறும் தினை, முக்கிய உணவுகளில் ஒன்று. முகாமிற்குத் தண்ணீர் கொண்டுவரும் பொறுப்பு பெண்கள், சிறுமிகளுடையது.

வோடபே பழங்குடி மக்கள் ஒரு சிறப்பு மிக்க நாடோடிகள், அவர்கள் பன்னிரண்டு வயது வரை தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிட மாட்டார்கள். ஜூலை முதல் செப்ரெம்பர் வரையிலான குறுகிய மழைக்காலம் அனைத்து வோடபே வம்சாவளி குழுக்களையும் அவர்களின் சடங்கு கலாசார நடனங்களான யாக்கே, வோர்சோ, ஜெரவோல் ஆகியவற்றிற்காக ஒன்றிணைக்கிறது.




ஆண்டின் பிற்பகுதியில் அவர்கள் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்திருப்பதைக் காண முடிகின்றது. வோடபே பழங்குடி மக்கள் பெரும்பாலும் இஸ்லாமியத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.


முதலில் பிறந்த குழந்தைகள் தாத்தா, பாட்டியால் பராமரிக்கப்படுகிறார்கள். வோடபே மக்கள் அற்புதமான மனிதர்கள், அவர்களின் வாழ்க்கை முறை ஈர்க்கும். மக்களின் கலாசாரம் விசித்திரமாக இருந்தாலும், அவர்கள் இன்னும் அற்புதமான வாழ்க்கையைக் கொண்டுள்ளனர். ஒரு மணப்பெண் தன் கணவனுக்கு கர்ப்பமான பிறகு, அவளை அந்த நிலையில் பார்க்க கணவனுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அவள் தன் தாயிடம் சென்று 'பூஃபிடோ' என்று அழைக்கப்படும் குழந்தையைப் பெற்றெடுக்கிறார்.

இந்தக் காலகட்டத்தில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு, கணவன்–மனைவி இடையேயான ஒவ்வொரு வகையான தொடர்பும் தடைசெய்யப்பட்டுள்ளது. கணவனுக்குத் தன் மனைவி வீட்டிற்குச் செல்வதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் அவரது தாய் பத்திரமாகப் பெற்றுக் கொடுத்தால் மட்டுமே அணுக முடியும். வோடபே மக்களிடம் அழகு உயர்வாகக் கருதப்படுவதால், ஒரு பெண் தன் கணவனாக இல்லாத பல ஆண்களுடன் உறங்குவது சாத்தியமாக்குகிறது. ஒரு பெண் அழகற்ற ஆணுடன் திருமணம் செய்து கொண்டால், அவளது கணவன் அவளுக்கு அழகான ஆணுடன் உறங்கும் உரிமையை அளித்து சிறந்த தோற்றமுடைய குழந்தைகளைப் பெறுகிறான்.

வோடபே ஆணாதிக்க சமூகமாக இருந்தாலும், தான் யாருடன் உறவு கொள்ள வேண்டும் என்கிற அதிகார பொறுப்பு பெண்களிடமே உள்ளது என்பது ஆறுதல் அளிக்கிறது. இங்கே ஆண்கள் போட்டியிடும் பங்கேற்பாளர்கள், பெண்கள் தீர்ப்பளிக்கும் நீதிபதிகள்!



# ஈராக்கில் குட் நகரில் வணிக வளாகத்தில் நடந்த தீ விபத்தில் பொதுமக்கள் 50 பேர் உயிரிழப்பு



கிழக்கு ஈராக்கின் அல்-குட் நகரில் உள்ள ஒரு ஹைப்பர் மார்க்கெட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளனர். வாசித் மாகாணத்தில் உள்ள அல்-குட் நகரில் உள்ள ஐந்து மாடி கட்டிட ஷாப்பிங் மால் இரவில் தீப்பிடித்து எரிந்தது, இதில் முதலில் ஒரு பல்பொருள் அங்காடி மற்றும் ஒரு உணவகத்தில் தீ பற்றியது. தீ விபத்து ஏற்பட்டபோது பாதிக்கப்பட்டவர்களில் பலர் மாலில் ஷாப்பிங் செய்தும், உணவருந்தியதாக கூறப்படுகிறது.

இத்தகைய தீப்பிழம்புகள் தொலைதூரம் வரையில் காணப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்படுத்தினர்.

இத்தகைய தீவிபத்தில் ஏராளமானோர் காயமடைந்துள்ளதாக ஈராக்கின் பஸிட் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். மேலும், தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. விபத்தில் இறந்தவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. அதில் ஒரு உடல் மிகவும் மோசமாக எரிந்ததால் அதை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஆனால் ஆரம்ப விசாரணை முடிவுகள் இரண்டு நாட்களுக்குள் வெளியிடப்படும் என்று ஈரானின் அரசு செய்தி நிறுவனமான ஐஎன்ஏ தெரிவித்துள்ளது. ஐஎன்ஏ இன் படி, கட்டிடம் மற்றும் மாலின் உரிமையாளர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப பட்டுள்ளது. (ஐ)

## மற்றுமொரு கட்சி வெளியேறியது இஸ்ரேலில் பிரதமர் நெதன்யாகு அரசு பெரும்பான்மையை இழந்தது



பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆளும் கூட்டணியில் இருந்து மற்றுமொரு கட்சி வெளியேறியது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே காசாவில் 21 மாதமாக தொடரும் போர் நிறுத்த விதிமுறைகள் குறித்த பேச்சுவார்த்தை நடந்து வருகின்றது. இதில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசு மத கல்லூரி மாணவர்களை ராணுவத்தில் சேர்க்கும் சர்ச்சைக்குரிய முயற்சிக்கு கூட்டணியில் உள்ள அல்ட்ரா ஆர்த்தடாக்ஸ் கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக அல்ட்ரா ஆர்த்தடாக்ஸ் கட்சி அறிவித்தது.

இதனால் பெரிய இழப்பு ஏதும் இல்லை என்று பார்க்கப்பட்ட நிலையில், ஷாஸ் அல்ட்ரா ஆர்த்தடாக்ஸ் கட்சியும் கூட்டணியில் இருந்து விலகியது. இதனால் நெதன்யாகுவின் அரசு பெரும்பான்மையை இழந்தது. (ஐ)

## அமெரிக்காவில் இருந்து 5 பேர் ஆப்ரிக்காவுக்கு நாடு கடத்தல்: டிரம்ப் நிர்வாகம் அதிரடி



அமெரிக்காவில் இருந்து 5 பேர் ஆப்பிரிக்க நாடான எஸ்வதினிக்கு நாடு கடத்தப்பட்டனர். அமெரிக்க அதிபராக 2ம் முறை பதவி ஏற்ற டிரம்ப் நிர்வாக சீர்திருத்தத்தை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களும், தங்கள் சொந்த நாடுகளில் குற்றம் இழைத்து விட்டு அமெரிக்காவில் தஞ்சம் அடைந்தவர்களும் நாடு கடத்தப்பட்டு வருகின்றனர்.

அவர்களில் சிலர் அமெரிக்காவுடன் எந்த வகையிலும் நட்பு கொண்டிராத மூன்றாம் நாடுகளுக்கும் நாடு கடத்தப்பட்டு வருகின்றனர். அதிபர் டிரம்பின் நாடு கடத்தும் நடவடிக்கைக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றமும் அனுமதி வழங்கி உள்ளது. இந்நிலையில் அமெரிக்காவின் நாடு கடத்தும் திட்டத்தின் ஒருபகுதியாக 5 பேர் சிறிய ஆப்பிரிக்க நாடான எஸ்வதினிக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இதுகுறித்து அமெரிக்க பொதுவிவகாரங்களுக்கான உதவி செயலாளர் டிரிசியா மெக்லாலின் தன் எக்ஸ் பதிவில், “வியட்நாம், ஜமைக்கா, கியூபா, ஏமன் மற்றும் லாவோஸ் நாடுகளை சேர்ந்த 5 ஆண்கள் விமானம் மூலம் எஸ்வதினிக்கு கடத்தப்பட்டனர். அவர்கள் அனைவரும் தண்டனை பெற்ற குற்றவாளிகள். அவர்களை திரும்ப அழைத்து செல்ல அவர்களின் சொந்த நாடுகள் மறுத்து விட்டன” என தெரிவித்துள்ளார். (ஐ)

## தற்போது கடும் பொருளாதார நெருக்கடியில் தவிக்கிறது கியூபா: மக்களின் வறுமையை கொச்சைப்படுத்திய கியூபா அமைச்சர் பதவி பறிப்பு



வறுமையில் வாடும் சொந்த நாட்டு மக்களை பிச்சைக்காரர் வேடம் போட்டவர்கள் என்று பேசிய கியூபா அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார். ஒரு காலத்தில் அமெரிக்காவிற்கே சிம்ம சொப்பனமாக விளங்கிய கியூபா, தற்போது கடும் பொருளாதார நெருக்கடியில் தவிக்கிறது. உணவு பஞ்சம், மருந்து தட்டுப்பாடு, வேலையின்மை, வறுமை போன்ற பிரச்சனைகளை மக்கள் அல்லாடுகிறார்கள்.

ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் மாதம் வெறும் 430 ரூபாய் மட்டுமே ஓய்வூதியமாக பெறுவதாகவும், அது தினமும் ஒரு முட்டை வாங்குவதற்குட போதாது என்றும் விமர்சனங்கள் எழுந்தன. வறுமை காரணமாக மக்கள் சுயமரியாதை இழக்கும் வேலைகளை செய்வதாகவும் குற்றசாட்டு எழுந்தது. இதற்கு பதிலளித்து நாடாளுமன்றத்தில் பேசிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மார்டா எலினா, கியூபாவில் பிச்சைக்காரர்கள் இல்லை.

அவர்கள் பிச்சைக்காரர்கள் போல வேஷம் போட்டவர்கள். சிலர் கண்ணாடி துடைக்கும் வேலை செய்து அந்த பணத்தை மது வாங்குவதற்கு பயன்படுத்துகிறார்கள் என்று கூறியிருந்தார். அவரது பேச்சில் மக்கள் இடையே கடும் கொந்தளிப்பை உருவாக்கிய நிலையில், கியூபா அதிபர் மிகுவல் டியாஸ்யில் அவரை பயங்கரமாக கண்டித்ததுடன் பதவி விலக கூறினார். இதனை தொடர்ந்து மார்டா எலினா ராஜினாமா செய்துள்ளார். (ஐ)

## அமெரிக்காவின் அலாஸ்கா மாகாண கடற்கரையில் 7.3 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாண கடற்கரையில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.3 ஆக பதிவான இந்த நிலநடுக்கம், அலாஸ்கா மாகாணத்தின் மையப்பகுதி தீவு நகரமான சாண்ட் பாயிண்டிற்கு தெற்கே சுமார் 87 கிலோமீட்டர் தொலைவில் ஏற்பட்டுள்ளது. 20 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் அச்சம் அடைந்த மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கத்திற்குப் பிறகு தெற்கு அலாஸ்கா மற்றும் அலாஸ்கா தீப கற்பத்திற்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. சாண்ட் பாயிண்ட் கடற்கரை பகுதிகளில் அதிகபட்சமாக 6.1 செ.மீ. அளவுக்கு சுனாமி அலைகள் எழுந்தது. பின்னர் 2 மணி நேரங்களுக்குப் பிறகு சுனாமி எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டது. மேலும் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து, சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிர் சேதங்கள், பொருட் சேதங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. பசபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள அலாஸ்கா மாகாணம் நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படக்கூடிய ‘ரிங்க் ஆப் பயர்’ என்ற இடத்தில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகின் நம்பர் 1 வீரர் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தினார் தமிழக செஸ் வீரர் பிரக்ஞானந்தா




உலகின் நம்பர் 1 வீரர் மேக்னஸ் கார்ல்சனை தமிழக செஸ் வீரர் பிரக்ஞானந்தா வீழ்த்தி உள்ளார். கிராண்ட் செஸ் சுற்றுப்பயணத்தின் அங்கமான பிரீ ஸ்டைல் சர்வதேச செஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் லாஸ் வேகாஸில் இன்று நடைபெற்ற 4வது சுற்றில் நம்பர் 1 வீரரான மார்க்ஸ் கார்ல்சன் , பிரக்ஞானந்தா ஆகியோர் மோதினர். இந்த ஆட்டத்தில் வெள்ளை நிற காய்களுடன் பிரக்ஞானந்தா விளையாடினார். கருப்பு நிற காய்களுடன் கார்ல்சன் விளையாடினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பிரக்ஞானந்தா கார்ல்சனை வீழ்த்தினார்.

மொத்தம் 7 சுற்றுகள் கொண்ட போட்டியில் 4வது சுற்று போட்டியில் மேக்னஸ் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்தினார். ப்ரீஸ்டைல் செஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் பிரக்ஞானந்தா 4.5 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தியதன் மூலம் ரேபிட் செஸ் தொடரில் இறுதி சுற்றுக்கு பிரக்ஞானந்தா தகுதி பெற்றார். (ஐ)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணித்த இரவு தபால் ரயிலிலேயே மேற்படி நபர் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தற்கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின்சடலம்உடற்கூற்றுப்பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கூமாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூமாங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் வீழ்ந்து மரணமடைந்திருந்தார்.

அந்த மரணத்துக்கு அந்தப் பகுதியில் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரே காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டதுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்நிலையில், மரணித்தவர் மாரடைப்புக் காரணமாக மரணித்தார் என்று சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் வாக்குமூலம் பெறுவதற்காக இருவரை அழைத்திருந்தனர்.

அவர்களிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்களைக் கைது செய்து வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அவர்கள் இருவரையும் எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் சில நபர்களைக் கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் ஒருவர் தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபைகளின் தவிசாளர்கள் பதில் வழங்கிய நிலையில் உள்ளூராட்சி சபைகள் ஊழல் பேர்வழிகள் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூறியதால் சபையில் குழப்பம் நிலவியது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூறிய வார்த்தையை மீளப் பெற வேண்டும் என்று உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் ஒருமித்து தமது எதிர்ப்புக்களை வெளியிட்டனர்.

இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. சுமார் ஐந்து நிமிடங்களுக்கு மேல் சபையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அவையை அமைதிப்படுத்தி தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றார்.

# 4ஆம் வகுப்பு மாணவி உலக சாதனை!

சோழன் உலக சாதனை புத்தகத்தில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த கனிஷ்கா என்ற மாணவி இடம்பிடித்துள்ளார்.

நுவரெலியா - கந்தப்பொல ரிலாமுல்ல தொடக்கப் பள்ளியில் 4ஆம் தரத்தில் கல்வி கற்று வரும் மாணவியே குறித்த சாதனையை படைத்துள்ளார்.

குறித்த மாணவி தனிம வரிசை அட்டவணையில் உள்ள 118 தனிமங்களின் பெயர்களை 24 நொடிகளில் கூறியுள்ளதுடன், மனித உடலின் உள் உறுப்புகள் 168 இன் பெயர்களைத் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 4 நிமிடங்களில் கூறி சாதனை படைத்துள்ளார்.

மாணவியின் இந்த முயற்சியானது சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாக வாணி ராஜா மற்றும் கண்டி மாவட்டத் துணைத் தலைவர் சந்திரமோகன் முன்னிலையில் நடைபெற்றது.

மாணவியின் முயற்சியை மிகவும் உன்னிப்பாக கண்காணித்த நடுவர்கள் அதை உலக சாதனையாக அங்கீகரித்தார்கள். சோழன் உலக சாதனை படைத்த மாணவி கனிஷ்காவிற்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், பதக்கம், பேட்ச் மற்றும் பைல் போன்றவை நடுவர்கள் மற்றும் முதன்மை விருந்தினரான வலப்பனை வலயக் கல்வி அலுவலக இயக்குநர் திசாநாயக, பாடசாலையின் தலைமை ஆசிரியர் விஜேந்திரன் போன்றோரினால் வழங்கி பாராட்டப்பட்டது.

சோழன் உலக சாதனை படைத்த மாணவியை அனைவரும் பாராட்டி வாழ்த்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"செம்மணி உட்பட அனைத்து புதைகுழிகளுக்குமான நீதிக்கான குரலைப் பலப்படுத்துவோம். ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதை உலகுக்குக் கூறுவோம். சர்வதேச தரத்திலான அகழ்வுப் பணி மட்டுமல்ல நீதிக்கான சர்வதேசத்தின் தலையீட்டையும், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவும் ஓங்கிக் குரல் எழுப்புவோம்." - என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள், "புத்த தேசமா? புதைகுழிகள் தேசமா? செம்மணியில் எலும்புகளாக எம்மவர்கள்... சர்வதேசமே தமிழர்களை ஏமாற்றாதே!, போர்க் குற்றத்தின் சாட்சி செம்மணி, வடக்கு, கிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து' போன்ற பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டக்காரர்கள் முன்னோக்கிப் பேரணியாகச் செல்ல முயன்ற வேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்

போராட்டக்காரர்கள் தங்களை முன்னோக்கிச் செல்வதற்கு அனுமதிக்குமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்த போதிலும் பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் முன்னோக்கி நகர முற்பட்ட வேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தியதால் குழப்ப நிலை ஏற்பட்டது

## அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள் இறக்குமதி- நகரவெவ பறவைகள் சரணாலயத்தின் உரிமையாளர் கைது!

ஹம்பாந்தோட்டை நகரவெவ பறவைகள் சரணாலயத்தின் உரிமையாளர் விசேட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நாராஹென்பிட்ட பகுதியில் வைத்து இன்றையதினம் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை மற்றும் மித்தெனிய பகுதிகளை சேர்ந்த 40 மற்றும் 50 வயதான பறவைகள் சரணாலயத்தின் முகாமையாளர் மற்றும் களஞ்சியசாலை பராமரிப்பாளராக பணியாற்றி வந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.

நாட்டிற்குள் சட்டவிரோதமாக அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து, அவற்றை ஹம்பாந்தோட்டை நகரவெவ பறவைகள் சரணாலயத்தில் உள்ள பறவை தீவனக் களஞ்சியசாலையில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 250 மில்லியன் பெறுமதியுடைய அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை மத்திய குற்ற விசாரணை பணியக அதிகாரிகள் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்







யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைலையில் இணைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் இன்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலாகவே இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் , கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், க.இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் வீதி அவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, போக்குவரத்து, மின்சாரம், வீடமைப்பு, சட்டம் ஒழுங்கு, கடற்றொழில், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பல்வேறு விடயங்களுக்கு நக்கல், நையாண்டி கலந்து பதிலளித்துக் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அதையடுத்துக் கூட்ட முடிவின் போது, "யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பேசப்பட்டமை குறைவு. தேவையற்ற விடயங்கள் பேசப்பட்டதே அதிகம். இப்படியான கூட்டம் இதுவே கடைசியாக இருக்க வேண்டும்." - என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2025 வெளியிடப்பெற்றது.